ஓய்வூதியச் சுற்று நிருப இலக்கம்: 04/2015

எனது இலக்கம்: ஓய்வூ/சுற்றுநிருபம்/2015
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
01-06-2015

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்/ திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ முப்படைத் தளபதிகள்,
பிரதேச செயலாளர்களிற்கு,

**இலத்திரனியல் ஓய்வூதிய அடையாள அட்டையினை அறிமுகப்படுத்துதல்.**

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள ஓய்வூதியர்களுக்காக வேண்டி இது வரையிலும் வழங்கப்பட்ட திறைசேரி 147 மற்றும் 148 ஓய்வூதியர் அடையாள அட்டைகளுக்குப் பதிலாக இலத்திரனியல் ஓய்வூதிய அடையாள அட்டையொன்று 01-06-2015 ஆந் திகதி முதல் ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றது.

02. நவீன தொழினுட்பத்தினை உபயோகித்து வடிவமைக்கப்பட்டுள்ள இப்புதிய அடையாள அட்டையில் ஓய்வூதியர்கள் மற்றும் அவர்களது தங்கி வாழ்வோரின் அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக நவீன தொழினுட்ப வசதிகளான VISA மற்றும் NFC (நவீன தொழினுட்பங்களின் படியான உள்ளூர் மற்றும் சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் இலகு வசதிகள்) ஆகியனவும் இதில் உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது.

03. புதிய இலத்திரனியல் ஓய்வூதிய அடையாள அட்டையின் மாதிரிப்படிவம் கீழ்வருமாறாகும்.



04. இவ் இலத்திரனியல் ஓய்வூதிய அடையாள அட்டையினை செல்லுபடியானதோர் அடையாள அட்டையாகப் பயன்படுத்தும் வரப்பிரசாதமும் ஓய்வூதியர் சமூகத்திற்குக் கிடைக்கப் பெறும் என்பதனையும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

(ஒப்பம்)
**எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள்

| | | |
|---|---|---|
| 01. | சனாதிபதி செயலாளர். | - தயவுமிகு தகவலுக்காக |
| 02. | பிரதமரின் செயலாளர். | - தயவுமிகு தகவலுக்காக |
| 03. | செயலாளர் - பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி பற்றிய அமைச்சு. | - தயவுமிகு தகவலுக்காக |
| 04. | செயலாளர், நிதி அமைச்சு | - தயவுமிகு தகவலுக்காக |
| 05. | கணக்காய்வாளர் நாயகம். | - தயவுமிகு தகவலுக்காக |